# Proceedings of Jaffna Science Association

## Abstracts of Research Papers

Volume: 23 No: 01

Twenty-Third Annual Sessions
04 - 06 May 2016
Jaffna, Sri Lanka

ISSN 1800-1289

Scanned with CamScanner

D10 Achieving National Integratioan and Spiritual Harmony Throughrabindranath Tagore's Gitanjali....29
*S. Sarmatha*

D11 திருக்குறள் பழித்து நிற்கும் ஒழுக்கக்கேடுகள் - ஓர் ஒழுக்க மெய்யியல் ஆய்வு....30
*க.சோபனா, க. சிவானந்தமூத்தி*

D12 எகிப்திய ஜனநாயகத்துக்கான புரட்சியும் அதன் விளைவுகளும் - ஒரு நோக்கு....31
*S. Pirasath.*

D13 மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் இயேசுவின் குழந்தைப் பருவம்....32
*M. W. Surendraraj*

D14 உளநோயாளிகளை பராமரிப்போர் எதிர்கொள்ளும் மனச்சோர்வு யாழ்ப்பாண மாவட்டத்தை மையமாகக்கொண்ட ஆய்வு....33
*ஜ. தட்சாயினி, க. கஜவிந்தன்*

D15 சைவசித்தாந்தத்தில் வெளிப்படுத்தப்படும் கடவுள்கொள்கை நுட்பம்....34
*பா.தர்ஷிகா*

D16 சமகால மெய்யியல் வளர்ச்சியில் அளவையியலின் தாக்கமும் அதன் வளர்ச்சிப் போக்கும் Warsaw சிந்தனாகூடத்தை அடிப்படையாக கொண்ட ஓர் ஆய்வு....35
*த. தவனீசன்*

D17 விஞ்ஞான வளர்ச்சியில் அறிவைக் கட்டமைப்பதில் முறையியலின் வகிபங்கு....36
*தி. திலீபன்*

D18 Enhancing ESL Writing Through Collaboration: A Literature Survey....37
*V. Jokeswaran*

D19 Colonial Superiority as Depicted in the Novel Monsoon and Potholes by Manuke Wijesinghe....38
*M. Arivarasy*

D20 The Plight of Untouchable in Arundhati Roy's the God of Small Things: a Critical Analysis....39
*Y. Veeramankai Stalina*

D21 குறைவான அடிப்படை இசைக்கல்வி அறிவுடன் பல்கலைக்கழகத்துள் நுழையும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்குரிய காரணிகளும்....40
*K. Kirupasakthy*

D22 Versatility of Coir and Coir waste products for Interior Decoration....41
*S.Radhika*

D23 சங்ககால கலையும் கலை ஆற்றுகையும் - ஓர் அழகியல் மெய்யியல் ஆய்வு....42
*தெ.இந்திரகுமார், பேரா. சிவானந்தமூர்த்தி.*

**Members of the Review Panel**....43

Scanned with CamScanner

# சைவசித்தாந்தத்தில் வெளிப்படுத்தப்படும் கடவுள் கொள்கை நுட்பம்

**பா.தர்ஷிகா**
*மெய்யியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*
tharsigapackijanathan@gmail.com

பதி, பசு, பாசம் என்ற முப்பெருள் உண்மையினை விளக்கும் சைவசித்தாந்தமானது பதியான கடவுள் கொள்கையை முன்வைக்கும் பொருட்டு தர்க்க நுட்பங்களை பயன்படுத்துகிறது. இந்த வகையில் முதன்மைக்குரிய பொருளான கடவுள் பற்றிய சிந்தனைகளை எவ்வகையான நுட்பங்களினூடாக சைவசித்தாந்தம் முன்வைக்கிறது என்பதனை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

இவ் ஆய்வில் பண்புசார் நுட்பமே பயன்படுத்தப்படுகிறது. ஆய்வு முறையியல்களாக பகுப்பாய்வு முறையியலும் விபரணமுறையியலும் பயன்படுத்தப்படுகிறது. இங்கு இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் தகவல்கள் திரட்டப்படுகின்றன. இந்த வகையில் ஆய்வில் சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்ற மெய்கண்ட சாஸ்திர நூல்களும் அவற்றின் உரை நூல்களும் மேலும் துணை நூல்களாக இவ் ஆய்வுக் கட்டுரையுடன் தொடர்புடைய சைவசித்தாந்த நூல்களும் பயன்படுத்தப் படுகின்றன.

இந்த வகையில் இறைவன் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கும் பொருட்டு முதலில் இறைவனின் இருப்பு தர்க்க ரீதியில் நிறுவப்படுவதுடன் இறைவனின் இயல்பும் வெளிப்படுத்தப்படுத்தப்படுகிறது. இங்கு இறைவனை முதன்மைப் பொருளாக எடுத்தாள்வதுடன் இறைவனை அடைதலே உயரிய இலக்காகவும் கருதப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** கடவுள் கொள்கை, தர்க்க நுட்பம், இறையிருப்பு, இறையியல்பு, சிவஞான போதம், சிவஞான சித்தியார்



Scanned with CamScanner